Registered No. M-4433. Madras War Review (TAMIL) 7-7-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம்வரு ஜூலைமீ 7உ, வெள்ளிக்கிழமை இதழ் 44

ஜெனரல் சர் க்ளாட் ஆகின்லெக்.

கல்வியில்லாமல் தைரியத்தால் மட்டும் பயனில்லை

☆

இந்தக் காலத்தில் ஒரு உத்தியோகஸ்தருக்கு தைரியமும் உடல் பலமும் மட்டும் இருந்தால் போதாது. கல்வியும் அவசியம் ; இல்லாவிட்டால் அவர் திறமைசாலியா யிருக்க முடியாது. திறமை யில்லாததோர் உத்தியோகஸ்தரிடம் என் ஆட்களின் உயிரை ஒப்புவிக்க மாட்டேன். ஏனென்றல் நம் ஆட்கள் மிகவும் நல்லவர்கள். தலைவரின் தவறுதல்களால் அவர்களுடைய அருமாந்த உயிர்கள் வீணுகப் பலியாகிவிடக் கூடாது.

கல்வி யில்லாமல் எப்படி தைரியம் மட்டும் பிரயோசனப்படாதோ, அது போலவே, தைரியம், உடற்கட்டு, தன்னடக்கம், ஒழுக்கம், சுய மரியாதை ஆகியவை யில்லாமல், கல்வி மட்டும் பயன்படாது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

“சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை” என்பதை உங்களுக்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்தியா போன்ற தோர் பரந்த நாட்டில், பஞ்சாப் போன்ற அதன் ஒரு மாகாணத்திலேயுங் கூட, பல வகைப்பட்ட இனத்தவர்கள் வசிக்கிறுர்கள். இந்த இனத்தவர்கள் எல்லோரும் சேர்ந்தது தான் உலகம்.

இந்த ஜில்லா, இந்த மாகாணம், இந்த நாடு முன்னேற்றமடைய வேண்டுமானுல், ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் தன்மை வேண்டும். நாம் அனைவரும் அதைக் கையாள வேண்டும். நாம் வெற்றி பெற வேண்டு மானுல், நமது பூரண பலமும் தேவைப்படும். ஆகவே, நாம் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு நமது பலத்தை வீணுக்கக் கூடாது.

ஜெனரல் சர் க்ளாட் ஆக்கின்லெக் இந்தியாவின் பிரதம படைத் தலைவர்
யுத்த போர்டு மகா நாட்டில் கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம்: சர் கிளாட் ஆக்கின்லக் ..	1	பிரயாணத்தைக் குறைத்தல் அவசியம்	5
கல்வியில்லாமல் தைரியத்தால் மட்டும் பய னில்லை	1	யுத்தகாலத்தில் அரசாங்க உதவி	6
பாட்டு: ரயில் பிரயாணத் தொல்லை	2	சட்டி காலி யாகிறதா?	7
தலையங்கம்: அமோகமான வெற்றி	3	படங்கள்	8
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	போர்க் கைதி பெருமாள்	9
வானொலி நாட் குறிப்பு	4	நோக்கந்தான் என்ன?	11
		யுத்த நாட் குறிப்புக்கள்	12

ரயில் பிரயாணத் தொல்லை

(பூமியில் மானிட ஜென்மம்—என்ற மெட்டு.)

(முன்வாரத் தொடர்ச்சி)

5 இந்தவிதம் ரயில் எண்ணரும் வகையில்
இன்று தொண்டே செய்தும் நன்றுறவே—நாமும்
நொந்தவிதம் அதில் தொந்தரவே செய்து
நூறு நூறுய்ச் சென்றுல் ஊறுசெய்வோம்

6 மூட்டைகளும் இளம் பிள்ளைகளும் மூத்த
முதியவரும் சென்றே வதியழியும்—இந்தக்
கேட்டை நினைத்தாலே கேவலம் அறிவுதான்
கிஞ்சிற்றும் இல்லை என்றே கேலிசெய்வார்

7 கையோடு கால்முதல் காயமெங்கும் வலி
கண்ட போதிலுமே கருத்தழிந்தே—எங்கும்
ஐயையோ என்றிளம் அரிவையர் அரற்றினும்
அறிவிழந்தே ரயில் உறில் இழுக்கே

8 சண்டையும் வாதுமே கொண்டிரவு பகல்
சகல நேரத்திலும் இகலே கண்டும்—மக்கள்
மண்டை யுடைந்திடு போதிலும் ரயில்தனில்
மாண்பிழந்தே செல்வர் வீண்பதரே

9 சொந்த மக்கள் நண்பர் தம்மையும் சுகமுடன்
சோபனம் செய்திடும் பிறர்தமையும்—காண
நொந்தே தினம் ரயில் வண்டியில் நைந்துநீர்
நொறுங்கிப் பயணம் செய்தல் வெறுங்கவலை.

K. M. B.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944 ம௵ ஜூலை மீ 7௳, வெள்ளிக்கிழமை | இதழ் 44

அமோகமான வெற்றி

வெள்ளை ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் ஒரு பாது காப்பு அரணை அமைத்திருந்தார்கள். அதற்கு '' பாதர் லாண்ட் லைன் '' என்று பெயர். இதை மகா உக்கிரமாக செம்படைகள் தாக்கின. நார்மண்டியில் நடை பெற்ற போராட்டத்தை விட, இது மகா கடுமையான தென்று தான் சொல்ல வேண்டும். இந்தச் செம்படைகளின் தலைவர் ஜெனரல் ரொகொசொப்ஸ்கி. ரஷ்ய நாட்டு எல்லைக்குள் ஜெர்மானியர் அமைத்திருந்த கடைசி ஜெர்மன் அரணை முன்புரத்தி லிருந்தும் பக்க வாட்டி லிருந்தும் மகா கடுமையாகச் செம்படைகள் தாக்கின. நெப்போலியனின் வெற்றிப் படைகளின் சவக் குழிகள் பெரிசீனா ஆற்றங் கரையில் தான். அதே ஆற்றங் கரையில் தான் இப்போதும் இக்கடும் போர் நடை பெறுகிறது. முன்பு நெப்போலியன் என்னும் சர்வாதிகாரி இங்கே தான் படு தோல்வி யடைந்தான். இங்கே இப்போது சர்வாதிகாரியான ஹிட்லருடைய படைகளை செம்படைகள் வளைந்து கொண்டு விட்டன. படை யெடுத்து சில நாட்கள் வரை வியக்கத் தக்க வெற்றிகள் செம்படைகளுக்குக் கிடைத்தன. எதிரியின் அரண்களோ மகா சிக்கலானவை. விஞ்ஞான இயைபுகளைக் கொண்டவை. இவற்றுள் ஒன்று ஜெர்மன் ரெய்ச் சபைக்கு அருகே அமைந்துள்ளது. '' பாதர்லாண்ட் லைன் '' என்பது நான்கு அரண்களைக் கொண்டது. அதாவது : பிடெப்ஸ்க், ஓர்ஷா, மொகிலேவ், ஷ்லோபின் ஆகியவை. இவற்றின் மதில்களைப் பிளக்க பல முறை முயன்றும் அவை பலமாகவே இருந்து வந்தன. கடைசியாக ஜெனரல் ரொகொசேர்ப்ஸ்கி தன் முழு பலங் கொண்டு தாக்கினார். இதற்கு முன் தகர்க்க முடியாதிருந்தும், மீண்டும் தன் முழு பலத்தையுங் கொண்டு அவர் தாக்கினாரென்றால், அவருக்குத் தன் தாக்கும் திறமையைக் குறித்து எவ்வளவு மனவுறுதி யிருந்திருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. போலந்திலுள்ள லக் முதல் வடக்கே பால்டிக் நாடுகள் வரை செம்படைகள் போர் முனையை அமைத்தனர். இது உண்மையிலே ஒரு மகத்தான திட்டந் தான். இந்தத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக நிறைவேற்றி விடுவார்கள் போலிருக்கிறது.

வெள்ளை ரஷ்யாவின் தலை நகரம் மின்ஸ்க். வடக்கே ஜெர்மானியர்கள் அமைத்துள்ள அரண்களில் அது தான் மகா கடுமையானது. இந்த அரணையும் செம்படைகள் தகர்த்துக் கைப்பற்றி விட்டன. இதற்கு முன்னதாக, ஒரு செம்படைப் பகுதி தெற்கு நோக்கிப் போய் கடுமையாகப் போராடி பொப்ருயிஸ்க் கோட்டையை பிடித்தது. மற்றொரு படைப் பகுதி வளைந்து போய் ஒசிபோவிச்சி என்னும் முக்கியமான ரயில்வே ஜங்ஷனையும் கைப்பற்றியது. இது பொப்ருயிஸ்குக்கு 25 மைல்கள் வட மேற்கே யிருக்கிறது. அன்றியும் பெரிசீனா அரணுக்குப் பின்புரம் இது அமைந்திருக்கிறது. இந்த ஒசிபோவிச்சி ரயில்வே ஜங்ஷன் பிடிபட்டதனால், ஸ்லட்ஸ்க் வழியாகச் செம்படைகள் புகுந்து போவதற்கு வழி ஏற்பட்டது. மின்ஸ்கைக் கைப்பற்ற இது பெரிதும் உதவியது. மின்ஸ்கில் ரஷ்யர்கள் அடைந்த வெற்றி மிகச் சிறந்தது.

ஒரு வார காலத்தில் செம்படைகள் 150 முதல் 200 மைல் தூரம் முன்னேறி விட்டார்களென்றால், அது பெரிதும் வியந்து பாராட்டத் தக்கது தான். மின்ஸ்க் நகரம் இப்போது கைப்பற்றப் பட்டு விட்டதனால், விடெப்ஸ்க்-மின்ஸ்க்-ஷ்லோபின் முக்கோணத்திற்குட்பட்ட ஜெர்மன் படைகள் வலைக்குள் அகப்பட்ட எலிகளைப்போல் தப்பிக்கொள்ள முடியாமற் சிக்கியிருக்க வேண்டும். இனி ரஷ்யர்கள் என்ன செய்யலா மென்று பார்த்தால், எல்லாப் போர்முனைகளிலும் ஏக காலத்தில் தாக்குதற் போராட்டத்தை நடத்தக் கூடும் ; அல்லது 1920-ம் வருஷம் வார்சா மீது படை யெடுத்துப் போனது போல இப்போதும் போகலாம். அல்லது கிழக்குப் ரஷ்யா மீது படை யெடுத்துப் போகலாம். இப்படிச் செய்வது ஜெர்மன் நாட்டையே தாக்கியதாகும்.

பின்லாந்திலுள்ள லடோகா ஏரிக்கும் ஒனிகா ஏரிக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் தான், ரஷ்யர்கள் முயற்சி முக்கியமானதா யிருந்தது. ஆகவே பின்லாந்து மக்கள் பின்னிஷ்-கரீலியன் குடியரசின் தலை நகரான பெட்ரோசவோட்ஸ்க் என்னும் நகரத்தை விட்டுக் காலி செய்து விட்டனர். தாம் அங்கிருந்து வெளி யேறும்போது, ஏராளமான தளவாடங்களையும் அங்கேயே விட்டு விட்டுப் போய் விட்டனர். க்ரீலியன் பூசந்தியில் மானர்ஹீம் அரணில் எஞ்சியிருந்த ஜெர்மன் படையினரை ரஷ்யப் படையினர் அடியோடு அழித்தனர். ஒனிகாவிற்கு வடக்கே மர்மான்ஸ்க்-லெனின்கிராட் ரயில்வேயைச் சேர்ந்த அநேக ஸ்டேஷன்களைச் செம்படைகள் கைப்பற்றிக் கொண்டன.

பிரான்சில் இப்போது நடை பெறும் யுத்தத்தில் நேச நாடுகள் வெற்றி பெறுவதற்கு முக்கிய உதவியாயிருப்பது நேச நாடுகளின் விமானப் படைகள் தான் என்று ஒருவாறு துணிந்துக் கூறலாம். இந்தத் தாக்குதல் ஆரம்பமாகி 3 நாட்களில் மார்டின் ஹாலன்ஸ்லே பென் என்னும் ஒரு ஜெர்மன் இராணுவ விமர்சகர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

"இங்கிலாந்தும் அமெரிக்காவும் சேர்ந்து தாக்குவதற்கு ஏற்பாடுகள் நடை பெறுவதாயிருந்தால், தகுந்த துறை முகப் பட்டணத்தை விரைவாகக் கைப்பற்றிக் கொண்டால் தான் வெற்றி பெற முடியும். கடல்கடந்து சப்ளைகளையும் படைகளையும் தளவாடங்களையும் கொண்டு வர வேண்டிய நிலைமையி லிருக்கும் கட்சி, தகுந்த துறைமுகங்களைக் கைப் பற்ற வேண்டியது அவசியம்."

யுத்தம் ஆரம்பித்த 3-ம் நாளே அவர் அந்தக் கருத்தை வெளியிட்டார். அதன்படியே செர்பூர்க் துறைமுகத்தை நேசப் படையினர் கைப்பற்றினர்.

இதினின்றும் யுத்தத்தின் போக்கு நேச நாடுகளுக்கு அமோகமான வெற்றியைத் தந்து கொண்டிருக்கிற தென்று தெரிகிறது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ஜப்பானியர் பேராசைக் கண்.

பர்மாவை ஜப்பானியர்கள் கைப்பற்றிய பிறகு அவர்களுடைய பேராசைக் கண் இந்தியா மீது பாய்ந்தது. இந்தியாவைக் கைப்பற்றுவதெப்படி என்னும் பிரச்சினை எழுந்தது. இதற்குத் தக்கபடி திட்டமிட்டார்கள். முதலாவதாக இம்பாலைக் கைப்பற்றுவது இரண்டாவதாக வட பர்மாவிலுள்ள ஜெனரல் ஸ்டில்வெல்லின் படைகளை அழிப்பது. இம்பாலைக் கைப்பற்றினால் மட்டுந் தான் ஜெனரல் ஸ்டில்வெல் படைகளை அழிக்க முடியும். இம்பால் ஜப்பானியர் வசமாகி விட்டால், மணிப்பூர் ரோடும் அவர்களுடைய ஆதிக்கத்திற் குட்பட்டுவிட நேரும். மணிப்பூர் ரோடு முக்கியமானதோர் கேந்திர ஸ்தானம். எப்படி யென்றால் மணிப்பூர் ரோடு வழியாகத் தான் ஜெனரல் ஸ்டில்வெல்லுக்கு சப்ளைகள் போகக்கூடும்; ஆகவே, மணிப்பூர் ரோடை ஜப்பானியர்கள் கைப்பற்றினால் ஜெனரல் ஸ்டில்வெல்லின் படைகள் எல்லா வகைகளிலும் அல்லற்பட நேரும். அது மட்டு மன்று, இந்தியாவிலேயே முன்னதாக வுள்ள தளங்கள் ஜப்பானியர் வயப்பட நேரும். தாம் பர்மாவில் பலமாக ஊன்றிக் கொண்டு, நேச நாடுகளின் விமான தளங்களை உள் நாட்டிற்குக் கொண்டு போகும்படி செய்வதனால், இந்திய மக்களுக்குள் கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கக் கூடுமென்று ஜப்பானியர்கள் எதிர்பார்த்தார்கள். இப்படிப்பட் எண்ணத்தை ஜப்பானியர் கொண்டிருந்தார்கள் என்று சொல்லுவதற்கு, ஆதாரமில்லாமலில்லை. ஜெர்மன் 15-வது படைக்கு, அதன் தலைவர் சென்ற பிப்ரவரி மாதம் 20-ம் தேதி ஒரு செய்தி விடுத்தார். அந்தச் செய்தியில் ஜப்பானியர்களின் எண்ணம் பிரதி பலிக்கிறது. அச்செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"இந்தப் போராட்டத்தைக் குறித்து உலகம் முழுதுமே கவனித்துக் கொண்டிருக்கிறது. நம் நாட்டிலுள்ள கோடிக் கணக்கான மக்களும் இது பற்றி ஆவலோடு கவனித்துக் கொண்டு தான் வருகிறார்கள். இந்தப் போராட்டம் ஒரு முடிவடையத் தக்க முறையில் நடந்து கொண்டிருக்கிறது. யுத்தம் முடிவாகவும் கூடும். ஆகவே, நமது கடமை மகா முக்கியமானது. நமது நோக்கம் ஈடேறும் பொருட்டு, நம் முழு பலத்தையும் அறிவையுங் கொண்டு முயற்சிக்க வேண்டும்".

ஜப்பானியர் வெற்றி தாகமும் தோல்வி வேகமும்.

இந்தச் செய்தியை ஒருவேத வாக்காகக் கொண்டு ஜப்பானியப் படையினர் போராடினார்கள். மகா வேகமாக முன்னேறினார்கள். இம்பால்-கொஹிமா ரோட்டை யடுத்தார்கள். அஸ்ஸாம்-வங்காள ரயில்வேயையுங் கூட நெருங்கி விட்டார்களென்று சொல்லலாம். இம்பாலுக்கு எந்த வித உதவியோ சப்ளையோ போக முடியாதபடி அதைத் துண்டித்து அதை முற்றுகையிட்டார்கள். வட பர்மாவில் அப்போது ஜெனரல் ஸ்டில்வெல்லுடைய படைகள் இயங்க முடியாதபடி தற்காலிகமாக தடுக்கப் பட்டார்கள். இது வரை எல்லாம் ஜப்பானியர்களின் எண்ணப்படியே நடந்தன. இது கண்டு ஜப்பானியர்கள் தம் வெற்றிகளைக் குறித்து பிரமாதப் படுத்திவிட்டார்கள். மார்ச்சு மாதம் 30-ம் தேதியே கொஹிமாவைத் தாம் கைப்பற்றி விட்டதாகக் கூறினார்கள். இம்பால் நகரத்தை ஏப்ரல் மாதம் 6-ம் தேதி கைப்பற்றி விட்டதாக, டோக்கியோ ரேடியோ கூறியது. இதன் பயனாக "ஜெனரல் ஸ்டில்வெல்லின் படைகளுக்கு பக்க உதவியோ சப்ளையோ போக முடியாதபடி செய்து விட்டோம்" என்று வீரம் பேசியது. பிறகு ஜப்பான் செய்த பிரசாரத்திலிருந்தே இது முழுப் பொய் என்பது தெளிவாகத் தெரிந்தது. அதாவது, அதற்குப் பிறகு, "இம்பால் விழுந்து விடத் தக்க நிலைமையிலிருக்கிறது" என்று கூறியது. மே மாதம் 27-ம் தேதி, தாம் இதற்கு முன்பு ஒலி பெருக்கிய வற்றை மறந்து விட்டு "கூடிய சீக்கிரம் இம்பால் சரணடைந்து விடும்; நேசப் படைகள் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும்; அல்லது அடியோடு அழிய வேண்டும்" என்று முன்னுக்குப் பின் முரணாக அறிவித்தது.

இவை யனைத்தும் ஜப்பானியரின் உள்ளத்தின் போக்கைக் குறிக்கின்றன. உண்மை என்ன வென்றால், தாம் அடைந்ததாக ஜப்பானியர்கள் பிரசாரம் செய்த வெற்றிக ளெல்லாம் நேச நாடுகளுக்குத் தான் உரியவை. அதாவது நேச நாட்டுப் படைகள் இம்பால்-கொஹிமா ரோட்டை மீட்டு வட பர்மாவை நோக்கித் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தன. இந்த ரோட்டில் 7 நாட்களில் 52 மைல் தூரம் நேசப் படைகள் முன்னேறின வென்றால், எவ்வளவு வேகமாக ஜப்பானியப் படைகள் பின் வாங்கிப் போயிருக்க வேண்டும்! கமாயிங் மோகாங் ஆகியவற்றை நேசப் படைகள் மீண்டும் கைப்பற்றியதிலிருந்து, எதிரி தான் போட்ட திட்டத்தில் ஒரு திவலையளவு கூட சாதிக்க முடியவில்லை யென்று தெளிவாகத் தெரிகிறது.

இம்பால் மீட்கப்பட்டு விட்டாலும் அதற்குக் கிழக்கே ஜப்பானியர்கள் திரண்டு கொண்டு தான் இருக்கின்றார்கள். பிஷென்பூரிலிருந்து ஜப்பானியர்களுக்குப் பக்க பலம் வந்து கொண்டிருந்தது. இப்போது அங்கேயும் கடுமையான போர் நடந்து கொண்டிருக்கிறது.

இப்போது இம்பாலைப் பாதுகாக்கத் தக்க வசதிகள் ஏற்பட்டு விட்டன. வட பர்மாவில் ஜெனரல் ஸ்டில்வெல்லின் நோக்கம் ஈடேறிவிட்டதென்று ஒருவாறு கூறலாம். மோகாங்கை அவர் கைப்பற்றி விட்டார். மிட்கினாவையும் அவர் கைப்பற்றியது போலத் தான்.

வெற்றிக்குக் காரணங்கள்

இங்கே நேசப் படைகள் வெற்றி பெற்றதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பாகக் கூறலாம். (1) நமது உயரிய விமான பலம், (2) ஜெனரல் வின்டேயனுடைய சிண்டிட் படைகள் நடத்திய போராட்டம். நமது உயரிய விமான பலங் காரணமாக, நமது படைகளுக்குத் தேவையான சப்ளைகளை விமான மூலம் கொண்டு போய்ச் சேர்க்க முடிந்தது. அன்றியும் இடம் பார்த்து வெடி குண்டுகளை வீச்வும் பெரிதும் உதவியது.

சென்ற மூன்று வாரங்களாக மகத்தான வெற்றி பெற்றிருக்கிறோம். நமக்கு இயற்கையுங்கூட விரோதமாயிருந்தது. என்றாலும் நம் படையினரின் ஊக்கம் கடும் மழையையும் காற்றையும் கூடப் பொருட்படுத்த வில்லை. இந்த வெற்றிகளுக்கு மற்றொரு முக்கிய காரணம் நேச நாடுகளைச் சேர்ந்த பல வகைப் படைகளுக் குள்ளும் ஏற்பட்டிருந்த ஒத்துழைப்புத்தான். அங்கே, அமெரிக்கர்களும், சீனர்களும், பிரிட்டிஷாரும், இந்தியரும், சிண்டிட்களும் ஒத்துழைத்துப் போராடினார்கள். அது போலவே விமானப் படையிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அமெரிக்கர்களும் சீனர்களு மிருக்கிறார்கள்.

வானொலி நாட் குறிப்புக்கள்

11—7—44 மாலை 7-மணிக்கு—"யுத்த விமரிசம்"—மிஸ்டர் ஆர். வெங்கடராஜுலு நாயுடு.

12—7—44 மாலை 7-மணிக்கு—"யுத்த முயற்சி"—மிஸ்டர் எம். இ. வீரபாகு பிள்ளை.

பிரயாணத்தைக் குறைத்தல் அவசியம்

யுத்த உதவியில் பெண்கள் பங்கு

பஞ்சத்தைப் போக்க வழி

ஸ்ரீமதி மீனும்பாள் சிவராஜ்

உலகிலேற்பட்டிருக்கும் இம்மகா யுத்தத்தினுல் பலவித சௌகரியக் குறைவுகளேற்பட்டு மக்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் பல விதங்களிலும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதினுல் இந்த யுத்தத்தில் எம்மாதிரியான முறைகளைக் கொண்டால் சீக்கிரத்தில் வெற்றியடையலாமென்னும் எண்ணமாகவே நமது நேச நாடுகள் இன்றிருந்து வருகின்றன. யுத்தத்தை ஜெயிப்பதற்குப் போர் புரிய தைரியமும், பலமும் நிறைந்த போர் வீரர்களும் வீரர்கள் போர் புரிவதற்கு பல வித யுத்தக் கருவிகளும், அக்கருவிகள் செய்வதற்கு பல தொழிலாளர்களும், இவற்றிற்கு முக்கியமாகத் தேவையான பணமும் பணமுதவக் கூடிய தாராளச் சிந்தையுள்ள மக்களும் வேண்டும். மேலும் போர் வீரர்களுக்கு வேண்டிய உணவும், அவ்வுணவை விருத்தி செய்ய விவசாயிகளும், போர் வீரர்களையும், யுத்தக் கருவிகளையும், உணவுப் பொருட்களையும் குறித்த இடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு வேண்டிய வசதிகளுமிருந்தாலொழிய யுத்தத்தில் ஓர் தேசம் மற்றொரு தேசத்தை ஜெயிப்பது இலகுவான காரியமல்ல. நேச தேசத்தார் வெற்றியடைய வேண்டுமென்று நாம் கோருகிறோம்.

நாம் செய்யவேண்டிய உதவிகள் எவை

ஆகவே, இப்போரில் நாம் வெற்றியடைய வீரர்கள் முக்கியமாகையால் வீரர்களை திரட்டுதல், அனுவசியமான செலவுகளை நீக்கி, யுத்தத்தில் காய மடைந்துள்ள வீரர்களுக்குத் தேவையான பொருட்களை அனுப்பிவைக்கும் செஞ்சிலுவை சங்கத்துக்கும், யுத்த நிதிக்கும் பொருளுதவி செய்தல், தேவைக்கு மிஞ்சிய உணவுப் பொருள்களை சேமித்து வைக்காமலிருத்தல், பொய் வதந்திகளை நம்பாமலிருத்தல், அவைகளைப் பரவவொட்டாமல் தடுத்தல், முதலியனவாம். மேலும் எளிதாக எல்லோரும் செய்யக்கூடியது அவசியமற்ற காரியங்களுக்கு வெளியூர் பிரயாணம் செய்யாமலிருத்தல். இம் முறைகளை நாம் கைக்கொள்வோமானுல் சீக்கிரமாக வெற்றி பெறுவதற்கு உதவி செய்தவர்களாவோம். யுத்த காரியங்களுக்கு **நம்மால் ஏற்படும் அசௌகரியங்கள் எவை** என்பதை நாம் கவனிக்க வேண்டியது நம் முக்கிய கடமை. நம் நேச நாடுகள் வெற்றி யடையவேண்டும், நமது நாடு செழிப்பாக வாழ வேண்டுமென்று விரும்பினுல், நாம் செய்யக் கூடிய முக்கிய உதவி ரயில் பிரயாணத்தை இந்த யுத்த காலத்தில் ஒதிக்கித் தள்ள வேண்டியது தான். யுத்தத்தை மும்முரமாக நடத்துவதற்கு இரும்பும் மரமும் அவசியம். இவற்ருல் செய்யப்படும் பலவிதமான வண்டிகளில், ரயில் வண்டியும் ஒன்று. இன்றையத் தினம் நம் நாட்டில் ஓடிக்கொண்டிருக்கும் ரயில் வண்டிகளில் பெரும் பாகம் பல யுத்த அரங்கங்களுக்கு துருப்புகளையும், ஆயுதங்களையும் பல உணவுப் பொருட்களையும் தூக்கிச் சென்றவண்ண மிருக்கின்றன. ஆகவே நம் நாட்டில் பொது மக்களின் உபயோகத்திற் கென்று இருநத ரயில் வண்டிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

நிலக்கரிப் பஞ்சம்

அவ்வாறு குறைந்திருக்கும் ரயில் வண்டிகளுங் கூட, அடிக்கடி ஓட முடியாதவாறு சில தடுக்க முடியாத இடையூறுகளும் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது நிலக்கரிப் பஞ்சம். அவ்வாறு இருந்தும், எண்ணற்ற துருப்புகளை நாலா பக்கங்களிலிருந்து இந்தியாவின் பாதுகாப்புக்காக ஏற்றிச் செலலும் ரயில் வண்டிகள இரவும் பகலும் ஓயாமல் ஓடிக்கொண்டே யிருக்கின்றன.

உணவுப் பஞ்சம்

அதோடு தற்போது ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்திஞல் பாதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு அரிசி, மற்று முள்ள உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லவும், விறகு, மரம் முதலியவைகளை இதர இடங்களிலிருந்து வேண்டிய இடங்களுக்குக் கொண்டு வரவும் தற்போதுள்ள ரயில் வண்டிகள் போதுமானதாயில்லை. நெருக்கடியான இந் நேரத்தில் எதையும் சிந்தித்துப் பாராமல் முக்கியமற்ற காரியங்களுக்கு எல்லாம் ரயில் பிரயாணம் செய்கிறோம்.

ரயில் பிரயாணத்தின் தொல்லை

இம்மாதிரியான பிரயாணத்திஞல் ஏற்படும் கஷ்டங்களோ அநேகம். பணத்தைக் கொடுத்து டிக்கட் வாங்கியும், உட்கார இடமில்லாமல் ஜன நெருக்கத்தில் அகப்பட்டுக் கொண்டு மனிதர்கள் மேல் பெட்டியும், பேழையுமாக சகிக்க முடியாத கஷ்டத்தோடு குறித்த இடம் போய்ச் சேருவதற்குள் தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்ருகி விடுகின்றது. இவ்வளவு சிரமத்தோடும் படாத பாடு பட்டுக் கொண்டும் சில ஜனங்கள் ஏன் பிரயாணம் செய்கின்ருர்கள் என்று கவனித்தால், இவர்களின் அறியாமைக்கும், சிரமத்திற்கும் துக்கப் படவேண்டியிருக்கிறது. இவ்வளவு சிரமத்தையும் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு பிரயாணம் செய்யும் ஜனங்களில் பெரும்பாலோர் போகும் முக்கிய காரியம் என்னவென்று விசாரித்தால், தன் சுற்றத்தாரின் பிள்ளைகளுக்கு காது குத்தல், கோயிலில் திருவிழா, கோயிலுக்குக் குழந்தைக்கு முடியெடுப்பதாகப் பிரார்த்தனை, உறவினருக்கு நோய், நிச்சயதார்த்தம், விடுமுறைக்கு வேடிக்கையாக வெளியூர் பார்க்கப் போதல் போன்ற பதிலையே எதிர்பார்க்கலாம். பணக்காரர்களாகவோ, அல்லது உத்தியோகஸ்தர்களாகவோ இருப்பவர் கோடை விடுமுறைக்கோ, அல்லது வேறு வேலையாகவோ வெளியூர் போகவேண்டி நேரிட்டால் அவர் தம் மனைவி, மக்களோடல்லாமல் தம் பெட்டிகள், படுக்கைகளோடும் நில்லாமல் பல வேலையாட்களையும் இங்கிருந்தே அழைத்துச் செல்வது வழக்கம்.

பெட்ரோல் பஞ்சம்

யுத்தத்திஞல் பெட்ரோல் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்நாளில், பெட்ரோல் கஷ்டமறியாமல் மோட்டார்களை கேளிக்கைக்காகவும், பல தூர இடங்களுக்கு அனுவசியமாகச் செல்வதினுலும் பெட்ரோலும் வீணைகச் செலவழிக்கப்படுகின்றது. இம்மாதிரியான விஷயங்களில் குறிப்பாக பெண் மக்கள் தான் கூடுமானவரை முயற்சி செய்து, முக்கியமற்ற காரியங்களை விலக்க வேண்டும். தேருக்குப் போவதோ, திருவிழாப் பார்க்கப் போவதோ, சிறு காரியங்களுக்கெல்லாம் வெளியூர் போகவேண்டுமென்று ஆண் மக்களை வற்புறுத்தி, பணத்தையும் விரயமாக்கி, சொல்லொண்ணுக் கஷ்டத்தோடும் ரயில் பிரயாணம் செய்யத் தூண்டுபவர்கள் பெரும்பாலும் பெண்களே. ஒரு காரியத்திற்குக் கட்டாயம் போய்த் தான் ஆகவேண்டுமென்று தாயாரோ மனைவியோ உபத்திரவம் செய்தால், அச்சங்கடத்தினின்றும் எந்த ஆண் மகனுல் தான் மீள முடியும்? ஆகவே பெண் மக்கள் தான் இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கூடுமானவரை அனுவசிய பிரயாணங்களைத் தவிர்க்க வேண்டும். அம்மாதிரி நாம் செய்வதினுல்,

யுத்தத்திற்கு நாம் எவ்வாறு உதவி செய்தவர்களாவோம்?

நாம் எவ்வளவு குறைவாக பிரயாணம் செய்கிறோமோ, அவ்வளவுக்கு ரயிலில் போதுமான இட வசதியிருக்கும். இப்படி ஏற்படும் இட வசதியை, யுத்த சம்பந்தமான முக்கிய வேலையில் ஈடுபடுபவர்கள் பயன் படுத்திக் கொள்ளலாம். தம் சுற்றத்தாரை விட்டு நீங்கிப் போருக்குச் செல்லும் வீரர்களை ஏற்றிச் செல்லவும். போரினின்றும் தன் மனைவி, மக்கள் சுற்றத்தாரைக் காண ஆவலோடு பல நாட்கள் கழித்து திரும்பும் வீரர்களை அவரவர்கள் ஊருக்குக் கொண்டு சேர்க்கவும், உணவுப் பஞ்சத்திஞல் பீடிக்கப்படும் மாகாணங்களுக்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்லவும், அயல் மாகாணங்களிலிருந்து நமக்கு வேண்டிய பொருட்களை இங்கு சீக்கிரமே கொண்டு வந்து சேர்க்கவும், யுத்தத்தில் போர் புரியும் வீரர்களுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லவும் நாம் ரயில் வசதி செய்து

(6-ம் பக்கம் பார்க்க)

யுத்தகாலத்தில் அரசாங்க உதவி

தென் ஆற்காடு ஜில்லா

தேசியப் போர் முனை, பிரசாரத்தின் மூலமாய் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. படை திரட்டும் பணியில் இது புரிந்துள்ள உதவி பெரிதும் பாராட்டத் தக்கது. சேனை கப்பற்படை, ஆகாய விமானப் படை, போர்த் தொழிலாளர் பதிவு முதலிய எல்லாப் பகுதிகளுக்கும் பல நூற்றுக் கணக்கான ஆட்களை, படையில் சேருவதால் தற்காலத்தில் தமக்கும் எதிர் காலத்தில் தேசத்திற்கும் ஏற்படக் கூடிய நன்மைகளையெல்லாம் மனதில் பதியும் படி விளக்கும் பிரசாரத்தின் மூலம், சேர்த்து வருகிறது.

நேசக் கட்சிப் போர் வீரர்களுக்கு, சிறப்பாக இந்தியப் படையினருக்குச் சந்தோஷத்தையும் சௌகரியத்தையும் உண்டாக்கும் வகையில், பொருளாகவும் பண்டமாகவும் பல உதவிகளை மக்கள் மனமுவந்து அளிக்குமாறு, தேசீயப் போர் முனை வேண்டி வருகிறது. இந்தியர்களின் பொருளாதார நிலையை யுத்தேசித்து நம் காருண்ய கவர்ன்மெண்டார் வரிச் சுமையை யுத்தத்திற் கென விதிக்கவில்லை. இதை நன்றி யறிதலோடு நன்குணர்ந்த நம்மவர்கள், யுத்த நிதிக்கும், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற யுத்த சேவா சங்க நிதிகளுக்கும் தாராளமாகப் பொருளுதவி புரிகின்றனர். இதுவும் போர்ப் பிரசாரத்தின் பயனாகும்.

ஐரோப்பாவில் பல சிறு நாடுகள் ஐந்தாம் படைச் சூழ்ச்சிக்கு வசப்பட்டு ஜெர்மனியிடம் சிக்கிக் கொண்டன. அத்தகைய இழிதகையோரின் முயற்சி இங்கு ஒரு சிறிதும் பலிக்காத வகையில் யுத்த முன்னணி, திறம்படத் தன் வேலையைச் செய்து வருகிறது.

இந்தியாவின் இயந்திரக் கைத்தொழில் இந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆகையால் இந்தியா கீழ்த் திசையின் 'யுத்த தளவாடக் களஞ்சியம்' என்று பேசப் படுகிறது. இத்தேசத்து யுத்த முயற்சியின் தீவிரத்தையும், தொழில் வளர்ச்சியையும் குறித்து தேசீயப் போர் முனை பிரசார மூலமாய் மக்கட்கு ஓர் புதிய தொழில் ஆர்வம் தந்தது. இனி வேறென்னென்ன வகையில் இவ்வியக்கம் பணியாற்றுகிற தென்று கவனிப்போம்.

யுத்த காலத்தில் தினசரி வாழ்க்கையிலும், பொருளாதார நிலைமையிலும் அநேகம் பெரும் மாறுதல்கள் நேருகின்றன. இவைகளுக் கேற்ப, மக்கள் தம் நடை யுடை பாவனைகளை மாற்றிக் கொள்வது அவசியம். நம் நாட்டிலே நூற்றுக்கு எண்பது மக்கள் கல்வியில்லாக் காரணத்தால், இவர்களுக்கென தேசீயப் போர் முனை பல புத்திமதிகளையும் யோசனைகளையும் விளம்பரப் படுத்தி வருகிறது. மேலும் பொய் வதந்திகளை அறவே ஒழிப்பதும், மக்கள் மனப் பான்மையை செம்மையும் மேம்பாடும் அடையச் செய்வதும், யுத்த நிலையை உள்ளவாறு எடுத்துரைப்பதும் 'போர் முனை' புரியும் பெரும் பணிகளிற் சிலவாகும். யுத்த காலத்தில் குறைந்த செலவும் நிறைந்த சேமிப்பும் எதிர் கால நன்மைக்கு அதிக அவசிய மென்றும், இரயில் பிரயாணத்தைக் குறைக்க வேண்டு மென்றும், வியாபாரப் பொருள்களை கடற்கரையாயின் படகுகள் மூலமும் உள் நாடாயின் கால்வாய்கள் மூலமும் போக்குவரத்து செய்யுமாறும், பல வித யோசனைகள் பிரகாரம் செய்யப்படுகின்றன.

உணவு தானிய வகைகளை அதிகமாகப் பயிர் செய்யும்படியும், விருந்து முதலான வழிகளில் உணவுப் பொருள்களை வீணாக்காமல் இருக்குமாறும், நல்ல காய் கறி, கீரை, முட்டை, பால் முதலியவற்றை சாப்பாட்டு வகையில் சேர்த்து உண்ணுமாறும், சுகாதாரச் சுக வாழ்வுக்கும் சிக்கன வாழ்க்கைக்கும் வழிகள் சொல்லப் படுகின்றன.

யுத்தம் காரணமாகப் பண நடமாட்டம் அதிகப் பட்டு விட்டது. எங்கு பார்த்தாலும் பணப் பெருக்கம், விலை யேற்றம் ஒரு பக்கம். எனவே சிக்கன முறைகளும் சேமிப்புத் திட்டங்களும் அவசியமாயின. இவற்றை விளக்கி மக்களை இதில் ஈடுபடுத்துதல் ஒரு பெருஞ் சேவையாக இருந்து வருகிறது.

இந்த ஜில்லாவில் கோயில்களும் திருவிழாக்களும் அதிகம். விசேஷ காலங்களில் யுத்தப் படக் காட்சிகளும், யுத்த தளவாடக் கண் காட்சிகளும் ஏற்பாடு செய்யப் படுகின்றன. மாதா மாதம் சராசரி 520 யுத்தப் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. பெண்களுக் கெனவும், முகம்மதியருக்கும், ஆதித்திராவிடருக்கும் பிரத்தியேகமாகப் பிரசாரம் செய்யப் படுகின்றது.

யுத்த காலத்தில் அரசாங்கம் மக்களுக்குச் செய்து வரும் நன்மைகளை அவ்வப்போது எடுத் துரைத்து, அவர்களது நல்லுணர்ச்சியைத் தட்டி யெழுப்பித், தோல்வி மனப் பான்மையை அடியோடு ஒழித்து, பொய் வதந்திகளைப் பொசுக்கி, பல வகையில் வாழும் மக்கள் மனதை ஒரு முகப்படுத்தி, யுத்த முயற்சியைப் பெருக்கி, வெற்றி மூலம் விடுதலை காண்பதே தேசியப் போர் முனையின் இலட்சியங்கள்; இவ்வழிப்பட்டதே இதன் சேவையும்.

வட ஆற்காடு ஜில்லா.

இந்த ஜில்லாவில் தேசீயப் போர்முனையாரும் ஜில்லா சிப்பாய் குடும்பப் பாதுகாப்பு சபையாரும், சிப்பாய் குடும்பத்தினர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு உணவுப் பொருள்கள் சப்ளைசெய்யும் பல டிப்போக்கள் ஜில்லாவில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. 3-6-44-ல் திருவண்ணாமலையில் இத்தகைய டிப்போ ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

சிப்பாய் குடும்பங்களுக்கு உற்சாகத்தையும் இன்பத்தையும் கொடுத்து அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தாரும் தேசீயப் போர் முனையாரும் மிக்க அக்கரை கொண்டுள்ளார்கள். சென்ற 25-6-44 தேதி, வேலூர் வெற்றி இல்லத்தில் வேலூர் தாலூகா சிப்பாய் குடும்பத்தினர்களின் விசேஷக் கூட்டம் ஒன்று ஜில்லா கலெக்டர் கான் பஹதூர் எஸ். அஹமத் அலி சாஹிப் பஹதூர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் லெப்டனெண்ட் கர்னல் இ. பீதியன் ஆதம்ஸ் அவர்களும் விஜயம் செய்திருந்தார். சிப்பாய் குடும்பப் பெண்களுக்கும், சிறுவர் சிருமிகளுக்கும் விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் நடத்தி பரிசுகள் கொடுக்கப்பட்டன. இறுதியில், பிரபல ஆரணி வியாபாரியாகிய நைனா செட்டியார் அவர்கள் சிப்பாய் குடும்பத்தினருக்கு சிற்றுண்டி வழங்கினார். நாம் சுகமாய் வாழ தங்கள் உற்றார் உறவினரை விட்டு போர்முனை ஏகி வீரப்போர் புரியும் நம் இந்திய வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டுவன செய்வது நமது கடமையன்றோ! அக்கடமையை அரசாங்கத்தாரோடு ஒத்துழைத்து செவ்வனே நிறைவேற்றுவோமாக!

(5-ம் பக்கம்—தொடர்ச்சி)

கொடுத்தவர்களாவோம். பெட்ரோலும் யுத்தத்திற்கு பல வழிகளிலும் முக்கியமாக இருப்பதால், நாம் நம்மால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு மோட்டார் பிரயாணத்தைக் குறைக்க வேண்டும். ஆகையால் நேசநாடுகள் வெற்றி பெற்று நாமும் சுகமாக வாழ வேண்டு மென்று விரும்பினால்,

நம்மாலான உதவி

கூடுமான வரையில் ரயில் பிரயாணத்தைக் குறைத்தல், மோட்டார் பிரயாணத்தையும் குறைத்தல். தவிர்க முடியாத சந்தர்ப்பத்தினால் நாம் பிரயாணம் செய்யவேண்டிவரினும் தம்மோடு தம் வேலைக்காரர்களைக் கூட்டிக் கொண்டு போகாமலிருத்தல் போன்றவைகளே. ஒவ்வொரு உத்தியோகஸ்தரும், பணக்காரரும் ஒவ்வொரு வேலைக்காரனை விட்டுச் சென்றாலும் தினம் சுமார் பல நூறு பேர்கள் பிரயாணம் குறையலாம். இந் நூற்றுக் கணக்கானவர்களில் பயணம் தினமும் குறைந்தால் அதனால் ரயில் வண்டிகளில் பல்வேறு இதர காரியங்களுக்கு இட வசதி ஏற்படலாம். யுத்தத்திற்கு அவசியமான காரியமாக செல்லும் வீரர்களோ அல்லது தளவாடங்களோ ஏற்றிச் செல்லப்படலாம். ஆகவே, இம்மாதிரி அனாவசியமான பிரயாணங்களைக் குறைப்பதினால் நாம் அரசாங்கத்தாருக்கும், யுத்தத்திற்கும் பெருத்த உதவி செய்வார்களாவோம். நாம் செய்யும் உதவியினால், இன்னும் அநேக வீரர்களும், யுத்த தளவாடங்களும், உணவுப் பொருள்களும் ஏற்றிச் செல்ல அனுகூலமேற்படுவதனால் நேசநாட்டினருக்கு வெற்றியும் ஏற்படும். ஆகவே, சகோதரிகள் யாவரும் ஒரே மனதாக இக்காரியத்தில் சிரத்தையாக இருத்தல் அவசியம்.

சட்டி காலியாகிறதா?

சட்டியிலிருந்தால் தான் அகப்பையில் வருமே! என்றொரு பழமொழி உண்டு. நினைவிருக்கிறதா? சட்டியில் ஒன்றுமில்லை யென்றால், அகப்பையால் சுரண்டிச் சுரண்டி எடுத்தாலும், அந்த அகப்பையில் என்ன வரும்? அகப்பையை சட்டியிலிருந்து எடுக்கும் பொழுதே, அதிலே ஒன்றுமே ஒட்டிக் கொண்டிருக்கவில்லை என்பதை எதிரே இருக்கிறவன் பார்த்தால், 'சரி! சட்டிகாலி!' என்று தீர்மானித்து விட முடியுமா முடியாதா?

இதே போல, யுத்த களத்திலிருந்து வரும் செய்திகளிலிருந்தே, ஜெர்மனியின் தற்போதைய நிலைமையை அறிந்து கொள்ள முடியுமா, முடியாதா? முடியும்.

இப்பொழுது நார்மண்டியை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு நாஜிகள் பிரமாதமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தான் செய்திருந்தார்கள். சமுத்திரக் கரையோரங்களில் கனத்த 'கான்க்ரீட்' சுவர்களையும், பீரங்கிகளையும் வைத்திருந்தார்கள். ஆனால், நேசப் படைகளின் தலைவரான ஐஸன்ஹோவர் என்ன செய்தார்?

நாஜிகளுக்கு நாமம்

அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் பயனற்றுப் போகும்படி, விமான மூலம் ஜெர்மன் படைகளுக்குப் பின்னால் தமது படைகளைக் கொண்டு இறங்கச் செய்து விட்டார். அந்தப் படைகள் அங்கிருந்து கடற்கரைப் பாதுகாப்புகளைப் பின்னாலிருந்து போய்த் தாக்க ஆரம்பித்தன. பல பீரங்கிகள் சமுத்திரத்தைப் பார்த்துக் கொண்டே முண்டமாயிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதிலே நேசப் படைத் தலைவர்கள் நாஜித் தலைவர்களுக்கு நாமம் போட்டு விட்டார்கள். இதுவே நேச வெற்றிக்கு மூல காரணமாக இருந்தது.

இப்படி ஒரு போர்முனை மேற்குத் திசையில் ஆரம்பமாகும் என்று தான் ஹிட்லருக்கு வெகு காலமாகத் தெரியுமே, அப்படியிருந்தும் அவர் நேச தேசக் கடற்படையை ராஜாமாதிரி பிரான்ஸில் வந்திறங்கிக் காலூன்றி நின்று கொள்ள விட்டு விட்டாரே, ரொம்ப மோசமாயிருக்கிறதே இது! போர் விமானங்கள் எதுவும் அந்தப் படைகளைத் தாக்கப் போகவில்லையா? என்ன அவமானம்? என்று உலகோர் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஹிட்லர் விரும்பவே மாட்டார்

இப்படி தமது விரோதிகளை சும்மா விட்டுவிட தாமாக ஹிட்லர் ஒரு போதும் விரும்பி யிருக்கவே மாட்டார். அவர் என்னமோ, 'அடியுங்கள்! நொறுக்குங்கள்! நாசமாக்குங்கள்! கரையிலிறங்க விட வேண்டாம்!' என்று தான் பிரமாதமாக உத்திரவுகள் போட்டிருப்பார் ஆனால், சட்டியிலிருந்தால் அல்லவா அகப்பையில் வரும்? விமானங்கள் என்ன, மஹிராவணன் தலைகள் மாதிரி மாய சக்தியால் ஒன்று சுடப்பட்டுக் கீழே விழுந்ததும், நூறு புதிதாகக் கிளம்பிப் பறக்குமா என்ன? பாகம் பாகமாக, தொழிற்சாலைகள் தயாராகி அல்லவா வர வேண்டும்? அந்தத் தொழிற்சாலைகள் நிம்மதியாக வேலை செய்தால் அல்லவா அந்தப் பாகங்கள் வரும்? அந்தத் தொழிற்சாலைகளைத் தான் தேடிப் பிடித்து குண்டுகளால் நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்களே, பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகள். பாழான தொழிற்சாலைகளை 'ரிப்பேர்' செய்யு முன் திரும்பவும் விமானப் படை யெடுப்புக்கள் இருந்த வண்ணமே இருக்கின்றன! விமானங்களுக்குப் பாகங்கள் செய்வதை நிறுத்தி, தொழிற்சாலைகளில் உள்ள யந்திரங்களுக்கு பாகங்கள் தேடவேண்டி வந்து விடுகிறது. இதற்கு மத்தியிலே, நூற்றுக் கணக்கான விமானங்கள் வான வீதியிலும், தரையிலிருக்கும் போதும் நாசமடைகின்றன. ஹிட்லரின் கையாட்கள் தான் என்ன செய்வார்கள்? அவர்களுக்கென்ன வஞ்சனையா? நேச தேச விமானத் தொழிற்சாலைகள் இரவு பகலாக இடைஞ்சல் இல்லாது வேலை செய்து, நூதன நூதன விமானங்களைச் சிருஷ்டித்தனுப்புகின்றன. ஜெர்மனிக்கோ விமான பலம் அதி வேகமாகக் குறைந்து வருகிறது. எல்லாப் போர் முனைகளும் முக்கியமானவையாக ஆகிவிட்டன. ஆகவே, ஒரு போரரங்கத்திலிருந்து, இன்னொன்றிற்கு ஆட்களையோ, விமானங்களையோ கொண்டுவர முடியாதிருக்கிறது. பிரான்ஸிலே உள் நாட்டிலே கடும் போர் நடக்கலாம்; ஜெர்மன் நகர்களையும் காக்க வேண்டும்; இதற்கெல்லாம் போர் விமானங்கள் வேண்டுமென்று, ரோமல் நேச தேசப் படையெடுப்பிற்கு உதவியாக வந்த விமானங்களைத் தடுக்கவோ, நேச தேசக் கப்பல்களைத் தாக்கவோ விமானங்கள் பலவற்றை அனுப்பவில்லை போலிருக்கிறது. அது நேசப் படைகளுக்கு ரொம்ப சௌகரியமாகப் போய் விட்டது. மாப்பிள்ளைகள் மாதிரி வந்து இறங்கிவிட்டார்கள். இனி அவர்களைக் கிளப்ப முடியுமா?

ஜெர்மன் படைக்குப் பெட்ரோல் பஞ்சம்

இப்பொழுது இன்னொரு செய்தி வந்திருக்கிறது. ஜெர்மன் படைகளிடையிலே, பெட்ரோல் இல்லாமல், கரி போட்டுக் கொண்டு ஓடுகின்றனவாம் பல மோட்டார்கள். இதனால், அந்த வண்டிகள் ஓடும் வேகமும் குறையும். சக்தியும் குன்றும். சட்டியில் சரக்குக் குறைகிறது என்பதை இதுவும் காட்டுகிறது.

ஜெர்மனிக்கு எங்கெங்கிருந் தெல்லாம் பெட்ரோல் கிடைத்துக் கொண்டிருந்ததோ, அதற்கெல்லாம் ஆபத்து வரும்படி நேசதேசத்தார் செய்து விட்டார்கள். பெட்ரோல் இல்லாமல் இந்த யுத்தம் வெகு காலம் நடப்பது வெகு சிரமம். இதை யறிந்தே நேச விமானிகள் ஜெர்மானியரின் பெட்ரோல் சப்ளைகளைப் பாழாக்குவதில் கண்ணாக இருக்கிறார்கள். அதற்கேற்ற பலன் கிடைத்து விட்ட தென்றே தெரிகிறது.

ஜெர்மனிக்குப் பெரும் பலவீனம்

ருஷ்யாவிலே ஜெர்மானியருக்கு ஏக நஷ்டம். பல இடங்களில், இங்கெல்லாம் பயமே கிடையாது என்றெண்ணி, பல ஆயுதங்களையும், பெட்ரோலையும் சேகரித்து வைத்திருந்தனர். ருஷ்யர்கள் இடுக்கித் தாக்குதலில் மகா நிபுணர்களாகி விட்டார்கள். பெரிய ஊர்களை நேரிடையே தாக்குவதற்குப் பதிலாக, அந்நகரை விட்டு விட்டு, இடுக்கிபோல், அந்த நகரையும், இன்னும் பல இடங்களையும் கௌவப் போவதுபோல், இரு படைகளை தூரத் தூர ஓரே திசையில் முன்னேறச் செய்கிறார்கள். இந்த இடுக்கி மூடிக்கொண்டு விட்டால், அதற்குள் பல்லாயிரக் கணக்கான நாஜிப் படைகள் சிக்கவேண்டி வரும். அந்த நஷ்டத்தைத் தாளச் சகியாது, ஆயுதங்களையும், மற்றும் பெட்ரோல், உணவு போன்றவற்றையும் அப்படியே குப்பை குப்பையாகப் போட்டு விட்டு, தலை பிழைத்தால் தம்பிரான் புண்ணியம் என்று ஓடுகிறார்கள். இந்த ரீதியில் ஏராளமான பெட்ரோல் நாஜிகளுக்கு நஷ்டமாகி விட்டது. அதன் பயனாக இப்பொழுது பிரான்ஸ் போருக்கு பெட்ரோல் சப்ளை செய்வது கஷ்டமாக இருக்கிறது. இது ஒரு பெரிய பலஹீனம் தான். தவிர்க்க முடியாததும் கூட இது.

கோட்டை விட்டார்

இது மட்டுமா? ரோமலிடம் போதிய ஆட் பலமும் இல்லை. ஆட்களிருந்தால், குட்டி எதிர்ப்புகள் எதிர்ப்பதோடு நிற்பாரா அவர்? நேசப்படைகள் சில இடங்களில் பாறைகள் போல் போய் நின்று விடுகின்றன. ரோமல், சிறு சிறு படைகளையும், எட்டே காலே அரைக்கால் புலி, சிறுத்தை டாங்கிகளையும் முன்னே அனுப்புகிறார். அவை தம் எதிரிப் படைகளுக்குப் பல நூறுகஜ தூரத்திற்குள் செல்லு முன்பே, தூளாகின்றன. இம்மாதிரி சிறுகச்சிறுகப் படைகளை பலி கொடுப்பதால், பெரிய படை சீக்கிரமே கரைந்து போகும். டிராம், பஸ் செலவிற்கென்று ஐந்து ரூபாய்க்கு அணாக்களாக மாற்றி பைக்குள் போட்டுக்கொண்டு புறப்படுவோம். அரையணா, ஒரு அணா என்று எடுத்துக் கொடுத்துக் கொண்டே இருப்போம். திடீரென எதிர்பாராத சமயத்திலே பை காலியாக இருக்கும். பாதி வழியிலே டிராம் போய்க்கொண்டிருக்கும். கண்டக்டர் டிக்கெட் கேட்டதும், பையைத் தடவித் தடவிப் பார்த்து விட்டு, 'ஐ ஆம் ஸாரி!' என்று சொல்லிக்கொண்டே, நடு வழியில் இறங்கி, 'நட ராஜா' என்று நடந்து வருவோம். அதேபோலத் தானாகும் ரோமல் தமது

(10-ம் பக்கம் பார்க்க)



தீ விபத்தின்போது மீட்சியாளர் பயிற்சி.



காப்பாற்றுவதற்கு இரண்டாவது உதவியாளர் போகிறுர்.



கொழுந்துவிட்டெரியும் வீடு.



காயப்பட்ட சிப்பாய் 'ஆம்புலன்ஸ்' மோட்டாருக்குக்
கொண்டு போகப் படுகிறுர்.

வைத்தியக் கப்பலிலிருந்து வைத்திய ரயில் வண்டிக்குக் காயப்பட்டவர்கள்
மாற்றப்படும் காட்சி.

பார்வையிடும் பொருட்டு மேலதிகாரிகள் எப்பொழுது வருவார்கள்
என்று எதிர் பார்த்திருக்கும் தீப் படை.

சிறு கதை

போர்க் கைதி பெருமாள்

ஒரு சிற்றூர்—பெருங் கூட்டம் கூடியிருக்கிறது. அனைவரும் யாரையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் வந்தார். அனைவர் கண்களும் அவர்மேல் பாய்ந்தன. அந்தக் கூட்டத்தின் நடுவே யொரு மேடை போட்டிருந்தது. அதன் மேலுள்ள ஒரு நாற்காலியின் மீது அவர் அமர்ந்தார். கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

அவர் அனைவருக்கும் கை கூப்பி வணங்கி, போருக்குச் சென்றிருப்பவர்கள் சம்பந்தமாக யாரேனும் ஏதேனும் தெரிந்து கொள்ள விரும்பினால், தனக்குத் தெரிந்தவரை தகவல்கள் கொடுக்கக் கூடுமென்றும், தெரியாத விவரங்களை, மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து ஆகவேண்டியதைச் செய்வதாகவும், கூறினார்.

முனியன்—ஐயா! எம்மவென் பெருமாளு கிட்டேருந்து ஒரு வருஷமாக காயிதமே யில்லிங்க. அவெ இருக்கானு, இல்லியா ங்கிறது கூடத் தெரியிலேங்க.

அதிகாரி—உம்முடைய மகன் இறந்து போயிருந்தால், உடனே உமக்குத் தகவல் வரும்.

முனியன்—எய்யா! ஒங்க வாயாலெ அப்புடிச் சொல்றீங்க?

அதிகாரி—நான் என்ன சொல்ல வருகிறேனென்று பொறுமையோ டிருந்து கேளுங்கள்.

முனியன்—என்னுய்யா! நீ தான், எடுத்த எடுப்பிலேயே, எம்மவென் சாவுனும், தகவல் எனக்கு வருமுன்னு சொல் றீயே!

அதிகாரி—அது தானில்லை.

முனியன்—பின்னே என்னுத் தாஞ் சொன்னெ!

அதிகாரி—தகவல் எதுவும் வாராதிருப்பதினால், அவர் உயிரோடிருக்கிறுரென்று தான் அர்த்தம்.

முனியன்—அப்போ, எங்கண்ணு, உசுரோடேருக்கானு? எ(ன்) வவுத்திலே பாலெ ஊத்தினீங்க ஐயா!........
....ஆமா! அப்புடின்னு, அவெ(ன்) ஏங் காயிதமே போடுற தில்லெ?

அதிகாரி—அது சரி! அவர் எந்தப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்?

முனியன்—256-வது காடுவெட்டிப் பட்டாளம்.

அதிகாரி—அவருடைய நம்பர்.

முனியன்—246893.

அதிகாரி—(சில காகிதங்களையும் புத்தகங்களையும் புரட்டிப் பார்த்து). ஐயா! அவர் சுகமாகத் தான் இருக்கிறுர்.

முனியன்—எங்கே?

அதிகாரி—ஜெர்மன் கைதி முகாமில்.

முனியன்—கைதி முகாமா?

அதிகாரி—ஆமா, அங்கே தான்.

முனியன்—இவன் நம்ம ராசாவுக்காக வுல்லே சண்டை போடப் போனுன்.

அதிகாரி—ஆமா.

முனியன்—இப்போ, செருமானியங் கூட இருக்காங்கிறீங்களே! அந்தத் துரோகிப் பய மூஞ்சிலே தான் முழிக்கலாமா?

அதிகாரி—அந்த வீரரை ஏன் அப்படித் தூற்றுகிறீர்கள்? அவர் செய்த குற்ற மென்ன?

முனியன்—அவெந்தா(ன்) எதிரிங்களோடே சேர்ந்துகிட்டு இருக்காங்கிறீங்களே!

அதிகாரி—அல்ல; அல்ல. தமிழ் நாட்டு வீரர்கள் ஒரு போதும் அப்படிச் செய்ய மாட்டார்கள்.

முனியன்—என்னுய்யா! நீங்க தானே இப்போ சொன்னீங்க?

அதிகாரி—எதிரிகள் அவரைப் போர் முனையில் யுத்தக் கைதியாகப் பிடித்துக் கொண்டு போய் வைத்திருக்கிறுர்கள்.

முனியன்—ஐயய்யோ! எம்புள்ளெயா? கைதியா? அந்தப் பொல்லாத செருமானியனுங்க அவனெ என்னு பாடு படுத்துறுனுவளோ?

அதிகாரி—அதெல்லா மில்லை. அங்குள்ளவர்கள் நன்ருகப் பராமரிக்கப்படுகிறுர்கள்.

முனியன்—என்னமோ, எங்கண்ணெத் தொடெக்கிற பேச்சு இதெல்லா(ம்).

அதிகாரி—அப்படியல்ல.

முனியன்—அதிகாரிங்க, அப்புடித் தாஞ் சொல்லுவீங்க!

அதிகாரி—நாங்கள் பொய் சொல்லி ஏமாற்ற மாட்டோம். அடிக்கடி ஜெர்மன் வானொலி நிலையத்திலிருந்து யுத்தக் கைதிகள் பேசுவதை நாமே கேட்கிறோம்.

முனியன்—செருமனி, என்னு நம்ம அடுத்த ஊடா அங்கே பேசுறது இங்கே கேக்க?

அதிகாரி—அல்ல, அல்ல. வானொலி இயந்திரத்தின் உதவியைக் கொண்டு நாம் கேட்கிறோம். இதோ ஒரு வானொலி இயந்திரம்.

முனியன்—அங்கே பேசினுங்கன்னு, இது வளியா நமக்கு கேக்குமோ?

அதிகாரி—ஆம். கேட்கும்.

முனியன்—எம் மவென் பேசுறதெ, நாங் கேக்கலாமா?

அதிகாரி—நன்ருகக் கேட்கலாம்.

முனியன்—அவெந் தாம் பேசுருன்னு எனக் கெப்புடித் தெரியும்?

அதிகாரி—உங்களுடைய மகனுடைய குரல், உச்சரிப்பு முதலிய அனைத்தும் உங்களுக்குத் தெரிந்தது தானே!

முனியன்—எம்புள்ளெ பேசுற சத்தம் எனக்கு தெரியாதா? நல்லாத் தெரியும்.

அதிகாரி—நேரிலே இருந்து பேசுவதைப் போலே கேட்கும்.

முனியன்—எம்மவெ(ன்) பெருமாளு கூடப் பேசுவானுங்களா?

அதிகாரி—பேசலாம்.

முனியன்—எப்பப் பேசுவானுங்க?

அதிகாரி—அதைத் திட்டமாகச் சொல்ல முடியாது.

அந்தச் சமயத்தில், கரகர வென்ற ஒலி வானொலி இயந்திரத்தி லிருந்து கிளம்பியது. சற்று நேரத்திற் கெல்லாம் அதன் வாயிலாகப் பேசுவோரின் குரல் கேட்டது. இதைக் கேட்ட முனியன் திகைத்தான்.

முனியன்—எய்யா! இப்போ யார் பேசுருங்க?

அதிகாரி—உன் மகனைப் போல, கைதிகளாகி ஜெர்மானியர்களின் முகாமில் இருப்பவர்கள் தான்.

முனியன்—அப்புடின்னு, எங்க பெருமாளும் பேசுவானில்லெ?

அதிகாரி—பேசக் கூடும்.

அந்தச் சமயத்தில், "256-வது இந்தியக் காடு வெட்டிப் பட்டாளத்தைச்சேர்ந்த 246893-ம் நம்பர் லான்ஸ் நாயக் பெருமாள் பேசுறேன். நானு இங்கே சொவமா இருக்கே. அங்கே, அம்மா, அப்பா, தங்கச்சி அல்லாரும் சவுக்கியமா ருக்காங்களா? கூடிய சீக்கிரத்திலே வந்து சேருணுமுன்னு சாமியெக் கும்புடுங்க", என்று பேசிய குரலைக் கேட்டு முனியன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. தன் மகனை நேரில் கண்டது போலவே அவன் உள்ளம் பூரித்தான். தன் மகன் போர் முனையில் மடிந்திருக்க வேண்டுமென்று வருந்திக் கொண்டிருந்த முனியனின் மனம், பெருமகிழ்ச்சி கொண்டது வியப்பல்ல.

இது இங்ஙன மிருக்க, அந்த ஊருக்குத் தபாற்காரர் வந்தார். நான்கு நாட்களுக்கு ஒரு முறை அவர் அந்த ஊருக்கு விஜயம் செய்ய வேண்டு மென்பது திட்டம். ஆனுல், அவர் ஒரு மாதத்திற்கு ஒரு முறை வருவதே கஷ்டம். ஏனென்ருல், அந்த ஊரிலுள்ளவர்களுக்குச் சாதாரணமாகத் தபால்களே வருவதில்லை. ஆகவே, தபாற்கள் இல்லாத போது, அவர் ஏன் அவ்வூருக்கு வரவேண்டும். தபால்காரர் அவ்வூருக்கு விஜயம் செய்தால், அவரைச் சுற்றி அவ்வூரார் மொய்த்துக் கொண்டிருப்பார்கள். தபால்காரருக்கும் இதனுல் லாபமுண்டு. என்ருலும், இந்த முறை இவர் விஜயம் செய்த போது, ஊரிலுள்ளவர்க ளெல்லாம் பொதுக் கூட்டத்திற்குப் போய்விட்டார்களாகையால், எப்பொழுதும் உள்ள உற்சாகம் இல்லை. இருந்தாலும், தன் கடமை நிறைவேற்ற வேண்டு மல்லவா? எனவே, முனியன் வீட்டருகில் சென்று 'முனியன்!' என்று கூவினுர். முனியன் மனைவி ஆருயி வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

ஆருயி—ஏஞ்சாமி?

தபால்—ஒம் பேரா முனியன்?

ஆருயி—ஆருயி

இம்பாலிலிருந்து உக்ருலுக்குப் போகும் ரோட்டில் ஜப்பானியர் சுரங்க வெடிகள் போட்டிருக்கிறார்களா என்று சோதித்துக்கொண்டு முன்னேறும் நேசப் படைகள்.

தபால்—முனியனைக் கூப்பிட்டா, நீ வருறியே.

ஆருயி—நாந் தானே சாமி வருவே(ன்) ; பின்னே ஆரு வருவா ?

தபால்—முனியனெக் கூப்பிட்டா முனியந்தா(ன்) வரணும் ; ஆருயி வரக் கூடாது.

ஆருயி—என்னெ ஆருன்னு நெனெச்சுகிட்டீங்க ? எங்க ஊட்டுக்காரருதா(ன்) அவுரு.

தபால்—அது தாந் தெரியுதே. முனியனுக்குத் தான் மணியாடர் பணம் வந்திருக்குது. அவங் கிட்டெ கையெழுத்து வாங்கிக் கிட்டுதாங் குடுக்கணும்.

ஆருயி—எம்புட்டுப் பணம் சாமி ? ஆரு அனுப்பீருக்கா ?

தபால்—ரூ. 200. பட்டாளத்திலேருந்து வந்திருக்கு.

ஆருயி—அடே, எஞ்சாமி ! எம் மவெங்கிட்டேருந்துல்லெ வந்திருக்காப்புலேருக்கு ! ஏ சாமி ! எம் மச்சான் கூட்டத்துக்குப் போயிருக்கு. நாங் கூட்டியாரேன். நீங்க இங்கேயே இருங்க ?

தபால்—கூட்டமா ? எங்கே ? என்ன கூட்டம் ?

ஆருயி—நான் என்னத்தெ கண்டேன் ?

தபால்—தேசீயப் போர் முனைக் கூட்டமா இருந்தாலும் இருக்கலாம். நானே அங்கே வாறேன்.

இருவரும் விரைந்து கூட்டத்திற்கு வருகின்றனர். தபாற்காரரைக் கண்ட அந்தக் கிராமவாசிகள் அனைவரும் அவரையே நோக்கிக் கொண்டிருந்தார்கள். ஆருயியும் உடன் வருவதைக் கண்ட முனியன், எதிர் நோக்கிப் போனான்.

தபால்—நீ தானா முனியன் ?

முனியன்—ஆமாங் சாமி !

தபாற்—பெருமாளுங்கிறது ஆரு ?

முனியன்—சண்டெக்கிப் போயிருக்கா(ன்) எம் மவெ(ன்).

தபாற்—அவெ(ன்) ஒம் மவெந் தானா ?

முனியன்—அதென்னா, அப்படிக் கேக்கிறிங்க ? எம்மவெ(ன்) இல்லாமெ வேறே ஆரு மவெ(ன்) ; இப்பக் கூட என்னோடே பேசுனானே !

தபாற்—இப்பவா ?

முனியன்—ஆமா, இப்பத் தான்.

தபாற்—எங்கே ! எந்த எடத்திலே ?

முனியன்—இதே வெடத்திலே.

தபாற்—அப்படின்னா, அந்த பெருமாளு வேறெ ஆராச்சு மிருக்கும்.

முனியன்—இந்த ஊர்லேயே எம்மவெ(ன்) ஒருத்தந் தாஞ் சாமி பெருமாளு ; சண்டெக்கிப் போயிருக்கிறவ(ன்) அவந் தாஞ் சாமி !

தபாற்—இப்ப ஒன்னோடே பேசினானுங்கிறே ; சண்டெக்கிப் போயிருக்காங்கிறே ! என்னா, எனக் கொண்ணும் புரியல்லியே !

முனியன்—ஆமாங்கன்னா ? நப்புராணை அவன் தாம் பேசுனான் !

தபாற்—என்னா முனியா ! அவெ(ன்) சண்டெக்குப் போயிருக்காங்கிறே ! ; இங்கே ஒன்னோடே பேசுனாங்கிறே ! அது எப்படி முடியும் ?

முனியன்—ஆமாங்கன்னா. அங்கேருந்து பேசுனா(ன்) நாந்தாங் கேட்டேங்கிறேனே.

தபாற்—இன்னும் வேறே ஆராச்சும் கேட்டாங்களா ? நீமுட்டுந் தாங் கேட்டியா ?

முனியன்—இங்கேருக்கிற இம்புட்டும் பேருந் தாங் கேட்டாங்க.

இப்படியாகப் பேசிக் கொண்டே, மேடையருகிலே வந்து விட்டனர். மேடையிலிருந்த மேசை மீது ஒரு ரேடியோ வைக்கப்பட்டிருந்ததைத் தபாற் காரர் பார்த்து, உண்மை விளங்கிக் கொண்டு முனியனுடைய பெரு விரல் முத்திரையைப் பதிந்து கொண்டு ரூ. 200-ம் கொண்ட ஒரு காயிதக் கூட்டையும், வேறொரு காயிதப் பையையும் கொடுத்து விட்டுப் போனார்.

ஒரு வருஷ காலமாக ஒரு தகவலும் தெரியா திருந்த தன் மகனிட மிருந்து பணமும் கடிதமும், வானொலி மூலம் செய்தியும் ஒரே நாளில் கிடைத்த முனியனும் ஆருயியும், அடைந்த இன்பத்திற்கு அளவு உண்டோ.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

தற்போதைய முறையைத் தொடர்ந்து அநுசரித்தால். நிறையப் படை அவரிடம் வட ஆபிரிக்காவி லிருந்தபோதெ, நல்ல சந்தர்ப்பம் இருந்த போதே அவர் கோட்டை விட்டார். இப்பொழுதோ சட்டியில் ‘ எ ரி லேது !’ இப்பொழுது என்ன கிழிக்கப் போகிறார் அவர் ?

இனி அப்படி அப்படித் தான்

இத்தாலியிலேயும் நாஸிகளால் நிற்கவே முடியவில்லை. நார்மண்டியிலும் அமெரிக்கர்கள் தெற்கு நோக்கிக் கிளம்பி விட்டார்கள். வெள்ளை ருஷ்யாவிலே, ஜெர்மனிக்கு உயிர் போலிருந்த மின்ஸ்க் ருஷ்யர் கைக்குப் போய்விட்டது. இனி வெள்ளை ருஷ்யப்போர் அப்படி அப்படித் தான்.

ருஷ்யர்கள் கூடிய சீக்கிரமே பால்கன் பிரதேசங்களில் தங்கள் கைவரிசைகளைக் காட்டக் கூடும். பின்லாந்திலும் ருஷ்யர்கள் கை ஓங்கியிருக்கிறது. வட திசையிலிருந்தும் ஜெர்மனிக்கு ஆபத்து வருமென்று அங்கு உஷார்ப்படுத்துகிறார் ஹிட்லர். கோபன்ஹாகனில் உள் நாட்டுக் கலகம் எற்படும் போலிருக்கிறது. அதை அடக்கி, அனைத்தையும் நாஸிகள் தம் வசப்படுத்திக் கொண்டு விட்டனர். எல்லாத் திசைகளிலிருந்தும் ஆபத்து ; நடுவிலே இருந்து கொண்டு எத்தனை காலம் நிம்மதி யற்று இருப்பது ?

சமாதானம் கோரலாமென்று கூட ஜெர்மானியர் நினைத்தாப் போலிருக்கிறது. இனியா நேச தேசத்தார்கள் அதைப்பற்றி எண்ணப் போகிறார்கள் ?

உலகையாள ஆசைப்பட்ட பலன்

அந்த யோசனையும் பிரயோசனப் படாது போனதால் தானோ என்னமோ, ஹிட்லரும், முஸோலினியும் ஜப்பானுக்கு ஓடி ஒளிக்க யத்தனிக்கிறார்கள் போலிருக்கிறது ! ‘ அவர்கள் பிடிபட்டு, சென்னை, பம்பாய், கல்கத்தா வீதிகளில் ஊர்கோலமாக நடத்திச் செல்லப்பட்டு, அவமானப் படுத்தப் படலாம் ’ என்று ஒரு லண்டன் செய்தி சொல்லுகிறது. அதை ஹிட்லரும், முஸோவும் விரும்புவார்களா ?

அவர்கள் மட்டும் உண்மையில் ஜப்பானுக்கு ஓடினால், ஐரோப்பியப் போர் எதிர்பார்ப்பதைவிட சீக்கிரமே முடியலாம். ஹிட்லரின் ரகசிய ஆயுதங்கள் எல்லாம் தீர்ந்து விட்டனவா ? அவரது ராக்ஷஸத் திட்டங்கள் காலியாகி விட்டனவா ? சட்டியில் இனி ஒன்றுமில்லையா ? அவரும், முஸோவும் ஜப்பானுக்கு ஓடினாலும் நல்லதே ! டோஜோவையும் அவர்களோடு சேர்த்து, இந்த திரிநாச மூர்த்திகளையும் ஒரேயடியாக அமுக்கிவிடலா மல்லவா ? பாவம் ! உலகைக் கட்டியாள ஆசைப்பட்டார்கள் ! இவர்களுக்கு என்ன முடிவு காத்திருக்கிறதோ !

நோக்கந்தான் என்ன?

மடமடவென பல பிரதேசங்களைக் கைப்பற்றினார்கள்; இப்பொழுது ஒவ்வொரு இடமாகக் கைவிட்டு வருகிறார்கள். எங்கும் பெரிய அளவில் அவர்கள் போராடக் காணோம். துணிந்தும் வெளியே வர மாட்டேனென்கிறார்கள். இவ்வாறு அமுத்தலாக யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் ஜப்பானியரின் நோக்கந்தான் என்ன என்பதை அறிய எல்லோரும் ஆவலாக இருப்பது இயற்கை.

ஜப்பானியர் திடுதிப்பென்று சிண்ட்வின் நதியைக் கடந்து இந்தியாவிற்குள் புகுந்தார்களல்லவா? அவர்கள் அவ்வாறு புகும்பொழுது, இங்கிலாந்தைப் போல் ஏழு மடங்கு பெரிதான இந்தியா முழுவதையும் கைப்பற்றி விடப்போகிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள் எனத் தோன்றுகிறதா உங்களுக்கு?

முழுத் தேங்காயை முழுங்குமா?

அவ்வாறு நீங்கள் நினைத்திருந்தால் அது சுத்தத் தவறான நினைப்பாகும். ஒரு வேளை ஜப்பானியர் அவ்வாறு நினைத்திருந்தால், அவர்களை வடிகட்டின முண்டங்கள் என்றே தைரியமாக அழைக்கலாம். முழுத்தேங்காயைக் கையிலெடுத்துக் கொண்டு, அதன் சிகையை வாயால் கடித்துக் கொள்ளும் குழந்தையைப் பார்த்து, 'இது இந்த முழுத் தேங்காயையும் விழுங்கப்போகிறது' என்று சொல்லுவதைப் போலத்தான், இந்தியாவின் கீழ் எல்லையில் கால் வைத்த ஜப்பானியர் இந்தியா முழுவதையும் கைப்பற்றப் போகிறார்கள் என்று நினைப்பது.

இந்தியாவின் பாதுகாப்பு

வெறும் ரயில்வே படங்களையோ, பூகோளப் படங்களையோ பார்ப்பவர்களுக்கு, இந்தியாவின் உள் பிரதேசம் பாதுகாப்பற்றதாகத் தோன்றலாம். ஆனால், இப்பொழுதுள்ள அசல் இந்தியா படத்தை பார்க்கக் கிடைத்தால், அது ராணுவ ரகசியம் கொண்டது. ஆகவே கிடைக்காது, அது கிடைத்தால், 'ஏ அப்பா! இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளா இந்தியாவில் செய்யப்பட்டிருக்கின்றன?' என்று கூறி ஆச்சரியப்படுவீர்கள்.

இந்தியாவின் பாதுகாப்பிற்காக இது வரை பல நூறு கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டிருக்கின்றன. எத்தகைய ஆபத்தையும் சமாளிக்க இந்தியா தயாராக இருக்கிறது.

நல்ல 'சான்ஸ்' போயிற்று!

ஆனால், இரண்டு வருடங்களுக்கு முன், ஜப்பானியருக்கு நல்ல 'சான்ஸ்' இருந்தது. அப்பொழுது இந்திய ராணுவம் சுண்டைக்காய் அளவில் தானிருந்தது. பர்மா, மலேயா, சிங்கப்பூர் ஆகிய பிரதேசங்களிலேயே போதுமான விமான எதிர்ப்பு பீரங்கிகளோ, விமானங்களோ இல்லையே! இந்தியாவில் இவை எல்லாம் 'சாம்பிள்'கள் மாதிரித்தானிருந்தன. அப்பொழுது ஜப்பானியர் இந்தியாவில் எங்கு புகுந்திருந்தாலும் நல்ல வெற்றிகளைக் கண்டிருக்கக்கூடும், பொது ஜன எதிர்ப்பு இல்லாதிருந்தால். ஆனால் இப்பொழுதோ, இனியோ அந்தப் பாச்சாவெல்லாம் பலியாது. அது பலியாது என்பதை இம்பால், கொஹிமா, உக்ருல் பிரதேசங்களில் நடந்தப் போர்களும், அவற்றிலே ஜப்பானியர் பட்ட உதைகளும் நம்மவர்கள் பெற்ற மகத்தான வெற்றிகளும் நன்றாக எடுத்துக் காட்டி விட்டனவே! இன்னும் ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சம் வாலை ஆட்டிக்கொண்டிருக்கிறார்கள் ஜப்பானியர்.

வட பர்மாவிலே

இங்கே இந்திய மண்ணில் அவர்கள் அடைந்த அநுபவம் ஒருபுறம் 'சூடாக' இருக்கட்டும். வட பர்மாவிலேயிருந்து தெற்கே, சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியிலிறங்கும் காவேரி போலிறங்கும் சீன, அமெரிக்கப் படைகளைத் திருப்பி விரட்ட ஜப்பானியரால் முடியவில்லை. இவ்வாறு அவர்கள் அங்கு கோட்டை விட்டுக் கொண்டிருப்பதால், அவர்கள் பர்மா ரஸ்தாவை சீக்கிரமே பறி கொடுக்க நேரிடலாம். அப்புறம் சீனத்திற்கு உள்ள பலம் அதிகமாகிவிடும். அதனால் ஜப்பானுக்கே மோசம் விளையலாமல்லவா? இதை ஜப்பானியர்கள் அறியாமலிருப்பார்களா?

அடிப்பட்டும், சும்மா இருப்பதேன்?

வங்காளக் குடாக் கடலிலே, இந்தியா, பர்மா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு சுமார் ஐநூறு மைல்களிலிருந்து, எழுநூறு மைல்கள் வரை உள்ள தூரத்திலிருக்கும் அந்தமானை நேச விமானங்கள் போய்த் துணிந்து தாக்குகின்றன. அதற்கு பதிலுக்குப் பதிலாக இந்தியாவில் எந்த இடத்தையும் ஜப்பானிய விமானங்கள் தாக்கவில்லை, வேண்டுமென்றே ஜப்பானியர் இவ்வாறிருக்கிறார்களா? அவர்கள் நோக்கந்தான் என்ன?

ஏன் இப்படி இருக்கிறது?

பஸிபிக் பிரதேசத்திலே, ஜப்பானியர் அமெரிக்கருக்கு சும்மா விட்டுக் கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். நல்ல உதையும் வாங்கிக் கொள்ளுகிறார்கள். பல இடங்களில் அமெரிக்கர்கள் புதிது புதிதாக வந்து இறங்கிய வண்ணமே இருக்கிறார்கள். அங்கெல்லாம் நீடித்த எதிர்ப்பு இல்லை. எத்தனை இடங்களில் தான் எதிர்ப்புக் கென்று ஆளை விடுவது? அப்படியானால் எதிர்க்க வரும் படைகளின் எண்ணிக்கை படையெடுக்கும் படையை விட அதிகமாக இருக்க வேண்டுமே! இப்படைக்கு கடல் மூலம் தானே உதவி போக வேண்டும்? கடலில் போகத்தான் இப்பொழுது தாராள வசதி இல்லையே! அதனால் ஆங்காங்கே உள்ள படைகள் ஆயுத பலம் இருக்கும் வரை போராடி மடிகின்றன. இதனால் ஜப்பானியருக்கு ஆள் பலம் குறையத்தானே செய்யும்? இது தெரிந்திருந்தும் ஜப்பான் என் யுத்தத்தை நீடிக்க வைக்கிறது? அதன் நோக்கந் தான் என்ன?

ஜம்பம் தான்!

வேறு ஒரு நோக்கமும் இல்லை இப்பொழுது. முதலிலே, ஹிட்லருடன் கூட்டாளியாகச் சேர்ந்தால், ஏதோ கட்டிக் கிழித்து விடலாம் என்று ஜப்பானியர் எண்ணினர். அதற் கேற்றாப் போல், கீழ்த் திசையிலிருந்தவர்களும் தூங்கிக் கொண்டிருந்தனர். அடித்தார்கள் அடி; ஆனால் இப்பொழுது எல்லோரும் விழித்துக் கொண்டு விட்டார்கள்.



தீப்பற்றி எரியும் வீட்டினின்று, மயக்கப் பட்டிருக்கும் ஒருவர் எடுத்து வரப்படும் காட்சி.

இப்பொழுது சட்டென்று பணிந்து கொடுத்து விட்டால் கேவலமல்லவா? அதற்குத் தான் யோசிக்கிறார்கள் ஜப்பானியத் தலைவர்கள். ஜப்பானிய மக்கள் தங்களைப் பற்றிக் குறைவாக நினைத்து விடப்படாதே என்று ஜம்பமாக இந்தியப் படையெடுப்பில் கவனம் செலுத்தினார்கள். கிழக்காசியாவைப் புனருத்தாரணம் செய்யும் யோசனையை அவர்கள் கைவிட்டிருக்க வேண்டும். இனி தம் தலைகளைக் காப்பாற்றிக் கொள்ளுவதே அவர்களுக்கு மூல கவலையாக இருக்கும். அடுத்து எந்தப் பிரதேசம் கையைவிட்டுப் போகப் போகிறதோ என்ற நினைவே அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். எங்காவது பெரிய நிலப் போரோ, கடற்போரோ நடத்தினால், ஆட்டம் சட், புட் என்று தீர்ந்து விடுமே என்று, ஏதோ அமுத்தல் கச்சேரி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். இது வெகு காலம் செல்லாது, அவர்கள் விரும்பாத பெரிய அடிகளை அவர்களுக்கு அளிக்க நேசதேசத்தார் திட்டம் போட்டிருக்கிறார்கள். அண்ணாத்தை ஹிட்லர் உதைபட்டு ஓய வேண்டியது தான் தாமதம். ஜப்பானியருக்கு பெரும் பூசை ஆரம்பமாகும் என்பது நிச்சயம்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஜூன் 28.—விமான எதிர்ப்புப் பீரங்கிப் படைத் தலைவரான சர் ப்ரெடரிக் பைல் காமன்ஸ் சபையில் ஒரு அறிக்கை விடுத்தார்.

ஜூன் 29.—மத்திய ஜெர்மனியிலுள்ள விமானத் தொழிற் சாலைகளையும், எண்ணெய் சுத்தம் செய்யும் ஒரு தொழிற் சாலையையும், பல இராணுவ, கைத் தொழில் பகுதிகளையும் 2,000 நேச நாட்டு விமானங்கள் தாக்கின.

ஜூன் 30.—விமான எதிர்ப்பு பீரங்கிகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களை மிஸ்டர் சர்ச்சில் ஆறு மணி நேரம் சுற்றிப் பார்த்தார்.

ஜூலை 2.—பறக்கும் விமான வெடி குண்டுகளைக் குறித்து மிஸ்டர் சர்ச்சில் இந்த வாரம் ஒரு அறிக்கை விடுப்பார்.

ஜெனரல் டீட்டில் சவ அடக்கத்தின் போது ஹிட்லர் ஒரு பிரசங்கம் செய்தார்.

ஜூலை 3.—பிரிட்டிஷ் ஸ்தானிகராக வாஷிங்டனிலிருக்கும் ஹாலிபாக்ஸ் பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஜூன் 29.—யுத்தம் காரணமாகச் சரண் புகுந்தவர்களுக்கு லிபியாவில் வசிக்க இடங் கொடுக்க பிரிட்டன் சம்மதித்து விட்டதாக அமெரிக்காவின் யுத்த உதவி மந்திரி மிஸ்டர் எட்வர்ட் ஸ்டெட்டினியஸ் குறிப்பிட்டார்.

ஜூன் 30.—உலக நாணய மகாநாடு நியூ ஹாம்ப்ஷையரைச் சேர்ந்த ப்ரெட்டன் என்னுமிடத்தில் ஆரம்பமானது. நேச நாடுகளும் அவற்றைச் சேர்ந்த நாடுகளும் ஆக 44 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜூலை 3.—அமெரிக்க உப தலைவர் மிஸ்டர் ஹென்றி ஏ. வாலஸ் சீனாவி லின்று கிளம்பினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூன் 28.—மோகாங்குக்கு வட கிழக்கில் 6 மைல் தூரத்திலுள்ள நம்டி என்னுமிடத்தை நேசப் படைகள் கைப்பற்றின.

இந்திய கப்பற் படைத் தலைவர் வைஸ் அட்மிரல் காட்ப்ரேக்கு மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் பக்கிங்ஹாம் அரண்மனையில் காட்சியளித்தார்.

ஜூலை 1.—இம்பாலுக்கு வட மேற்கே 20 மைல் தூரத்திலுள்ள சாரெய் கோங் என்னுமிடத்தை நேசப் படைகள் கைப் பற்றிக் கொண்டன.

ஜூலை 4.—14-வது படை உக்ரூலைக் கைப்பற்றியது.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

ஜூன் 28.—மொகிலேவ், சொகொலோவ், பைரோவ், லெபால், ஓசிபோவிச்சி முதலிய இடங்களை ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

தமக்கு எல்லா வித இராணுவ உதவிகளையும் வழங்குவதாக ஜெர்மனி ஒப்புக் கொண்டிருக்கிற தென்றும், ரஷ்யாவோடு தொடர்ந்து போராட வேண்டு மென்று கோரியிருக்கிறதென்றும் பின்லாந்து அரசாங்கம் நேற்றிரவு அறிவித்தது. நாஜிப் படைகள் பின்லாந்தின் தலை நகரமான ஹெல்சிங்கிக்குள் புகுந்து விட்டன வென்று தெரிகிறது.

ஜூன் 29.—பொப்ரூயிஸ்க், பெட்ரோசவோட்ஸ்க், கரீலியன் குடியரசின் தலை நகரம் முதலிய பல விடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

வெள்ளை ரஷ்யப் போராட்டத்தின் மூன்றாவது பகுதியில் 33,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டனரென்றும் 20,000 ஜெர்மானியர்கள் யுத்தக் கைதிகளாகப் பிடிபட்டன ரென்றும் அறிவிக்கப் படுகிறது.

ஜூன் 30.—வெட்ரினோ, டேஸ்னா முதலிய இடங்களை சோவியத் படைகள் கைப் பற்றின.

அமெரிக்காவுக்கும் பின்லாந்துக்கு மிருந்த தொடர்பு அறுந்து விட்டது.

ஜூலை 1.—போரிசோவை ரஷ்யப் படைகள் கைப்பற்றி, பல விடங்களில் பரிசினா ஆற்றைக் கடந்தன.

பின்லாந்தில் ஜெர்மன் படைத் தலைவராயிருந்து கொண்டிருந்த டீட்டில் இறந்து போனதாக அறிவிக்கப்படுகிறது.

ஜூலை 2.—மின்ஸ்கிலிருந்து ப்ரெஸ்ட், விடோவ்ஸ்க் லுனினெட்ஸ் ஆகிய ஊர்களுக்குப் போகும் ஜெர்மன் பாதையை ரஷ்யப் படைகள் வெட்டி விட்டன.

ஜூலை 3.—வெள்ளை ரஷ்யாவின் தலை நகரான மின்ஸ்கை சோவியத் படைகள் கைப்பற்றின.

க்ளூபோ கோயி மேக்ஷிட்சி, முதலிய இடங்களைச் செம்படைகள் கைப்பற்றின.

ஜூலை 4.—பொலோட்ஸ் முதலிய இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் பகுதி.

ஜூன் 28.—மானடியெரி, சான்வின் சென்ஸி, சஸ்ஸிடா, சுவிசினோ, காய் யெல்ல, போர்டோ, ஆகிய ஊர்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூன் 29.—கஸ்டாக்னிடோ, மாண்டி சியானோ, லாபோஸ், ப்ரெட்டா வேச்சியா ஆகிய ஊர்களை நேசப் படைகள் கைப் பற்றின.

ஜூன் 30.—காஸ்டிக்லியோன், டெல் லெகோ, மாண்டி பல்சியானோ ஆகிய இடங்களை 5-ம் படை கைப்பற்றியது.

ஜூலை 1.—ப்ளாரென்ஸ் பாது காப்பற்ற தோர் நகரமென்று அறிவிக்கப்பட்டது.

ஜூலை 2.—கோசினா என்னுமிடத்தை 5-ம் படை கைப்பற்றிக் கொண்டது.

பாரிடா, டிசியென்னா, மாண்டி டெக்சியோ, வால்பாப்ரிகா, மசரெடா, ரிகனேடி ஆகிய ஊர்களை 8-ம் படை கைப் பற்றியது.

ஜூலை 3.—சியெனா, ஓரியோனே, சினலுங்கா, பொஜானோ, நோசிரா, ஓசினோ, லோரெட்டோ, லூசிஞானோ ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்ஸன் இத்தாலி வந்து சேர்ந்தார்.

14-வது ஜெர்மன் படைத் தலைவரான ஜெனரல் வான் மெக்கன்சன் அவருடைய பதவியினின்று நீக்கப்பட்டார்.

ஜூலை 4.—கர்டோனா, செவரிம், மாடெலிகா ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூன் 28.—டூர்வில்லாவை நேசப் படைகள் கைப்பற்றின. ஓடோன் ஆற்றைக் கடந்தன.

நேற்றிரவு பாரிஸில் விஷி அரசாங்கப் பிரசார மந்திரி ஹென்ரியட் கொலை செய்யப் பட்டார்.

ஜூன் 29.—டெஸ்ஸெல், ப்ரெட்டிவில்லா, மெனாயிர், க்ரெய்ன் வில்லா, மாண்டரெய்ன் வில்லா ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

நார்மண்டியில் ஓர்னேக்குக் கிழக்கே நேசப் படைகள் வந்திறங்கி, காபூர்க் கைக் கைப்பற்றின.

ஜெனரல் அய்சினோவர் ஒரு முக்கியமான மகா நாட்டை இந்த வாரம் கூட்டு வித்ததாகவும், அதற்கு மிஸ்டர் சர்ச்சிலும் இரண்டாம் போர் முனையைச் சேர்ந்த படைத் தலைவர்கள் அனைவரும் விஜயம் செய்ததாகவும் தெரிகிறது.

இங்கிலாந்து அரசாங்கமும் போலந்து அரசாங்கமும் ஒரு கடன் குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஜூலை 3.—ப்ரெல்டிவில்லாவை பிரிட்டிஷ் படைகள் கைப் பற்றிக் கொண்டன.

வேலை நிறுத்தங்களால் டென்மார்க்கில் பெருங் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜூன் 28.—அமெரிக்காவின் யுத்த உதவி மந்திரி மிஸ்டர் ஜேம்ஸ் பாரெஸ்டால், டோக்கியோ உள்பட ஜப்பானின் தென் பகுதி தாக்கப்படக் கூடிய தூரத்தில் இருக்கிற தெனக் கூறினார்.

பார்மோசா தீவிலுள்ள ஜாக்கோவை அமெரிக்க வெடி குண்டு விமானங்கள் தாக்கின.

ஜூன் 29.—நியூகினியைச் சேர்ந்த ஹன்ஸா விரிகுடாவை ஆஸ்திரேலியப் படைகள் கைப் பற்றிக் கொண்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.